
தமிழ்நாடு அரசின் கடிதத்துக்கு

# ஆளுநர் மாளிகை கொடுத்த ஒப்புகை சீட்டு வெளியீடு!

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான வழக்கு: அனுமதி கோரிய கடிதத்திற்கான ஆதாரம்!

சென்னை, ஜூலை 9-

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் மீது வழக்குத் தொடர அனுமதி கோரி ஆளுநர் மாளிகைக்கு தமிழ்நாடு அரசு கடிதம் எழுதியிருந்தது. அதை பெற்றுக் கொண்ட ஆளுநர் மாளிகை அதிகாரிகள், அதற்கு வழங்கிய ஒப்புகை சீட்டு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.



Acknowledgement

Received a cover addressed to Thiru Anandrao Vishnu Patil, IAS., Principal Secretary to Governor, Raj Bhavan, Guindy, Chennai - 600 022, from the Public (SC) Department, Chennai-9, bearing File No. AC/454/2021, dated 12.09.2022 (w.e.,).

Signature & date :

Name & Designation

முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென கடந்த செப்டம்பரில் ஆளுநர் மாளிகைக்கு கடிதம் அனுப்பப்பட்டதாக நேற்று முன்தினம் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, தெரிவித்தார். இதையடுத்து நேற்று முன்தினம், ஒருசில வழக்குகளுக்கு சட்ட விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகவும், அதேபோல் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் தொடர்பான எந்தவித கோப்புகளும் ராஜ்பவனுக்கு வரவில்லை எனவும் ஆளுநர் மாளிகை தரப்பில் கூறியிருந்தார்கள்.

இந்நிலையில் தமிழக அரசின் பொதுத்துறை சார்பாக ஒப்புகை சீட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில், கடந்த 2022 செப்டம்பர் 12 ஆம் தேதி அனுப்பப்பட்ட கோப்பை பெற்றுக் கொண்டதாக ஆளுநர் மாளிகை ஒப்புகை சீட்டு வழங்கியுள்ளது தெரியவந்துள்ளது. அதேபோல் 'மே மாதம் அனுப்பிய நினைவூட்டல் கடிதத்தையும் நாங்கள் பெற்றுக் கொண்டோம்' என ஆளுநர் மாளிகை ஒப்புகை சீட்டு வழங்கியுள்ளது. முன்னதாக நேற்று முன்தினம் இந்தக் கடிதங்கள் தான் வரவில்லை என ஆளுநர் மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அதை ஆளுநர் மாளிகை பெற்றதாக வழங்கிய ஒப்புகைச் சீட்டு வெளியாகியுள்ளது.

ஊழல் வழக்கிலிருந்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களை காப்பாற்ற

# ஆளுநர் எடுத்துள்ள தந்திரமான நடவடிக்கை!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூலை 9-

சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது. சட்டத்தின் ஆய்வில் உள்ளது என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களை காப்பாற்ற ஆளுநர் எடுத்துள்ள தந்திர நடவடிக்கைதான் இது என்று புதுக்கோட்டையில் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து புதுக்கோட்டையில் அவர் அளித்த பேட்டி வருமாறு:

நான் அனுப்பிய கடிதத்திற்கு பதில் கடிதம் அனுப்பவில்லை, ஆளுநர் மாளிகையில் இருந்து பத்திரிக்கை செய்தி மட்டுமே வந்துள்ளது. ஆளுநரின் பி.ஆர்.ஓ. மூலமாக அனுப்பப்பட்ட பத்திரிகை செய்தியில் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், ரமணா ஆகியோர் மீது சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது சட்டத்தின் ஆய்வில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் 12.09.2022 அன்று சி.பி.ஐ.க்கு வழக்கு தொடர அனுமதி கேட்கப்பட்டது. அதற்கு வழக்கு தொடர அனுமதி கொடுத்திருக்கிறோமா இல்லையா என்று பதில் கூறாமல் மழுப்பலாக சட்ட நடவடிக்கையில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. சி.பி.ஐ. விசாரணை முடிந்த பிறகு தான் வழக்குத் தொடர அனுமதி கேட்பார்கள். சி.பி.ஐ. முழுவதுமாக அவர்களது பணியை முடித்து விட்டனர். சட்ட நடவடிக்கையை ஆளுநர் நடத்திக் கொண்டிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாக முடியாது. சட்ட நடவடிக்கை என்று சொல்லி ஆளுநர் தப்பித்துக்கொள்ள பார்க்கிறார். இரண்டு அதிமுக முன்னாள் அமைச்சர்களை காப்பாற்ற ஆளுநர் எடுத்துள்ள தந்திரமான நடவடிக்கை.



கே.சி. வீரமணி மீதும் 12.9.2022 அன்று முழு கோப்பையும் அனுப்பி உள்ளோம். ஆனால் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட கோப்புகள் அனுப்பவில்லை. வெறுமெனே அனுப்பினார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் வெறுமனே அந்த கோப்புகளை அனுப்ப முடியாது. ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் பொழுது முழு கோப்புகளும் அனுப்பப்படும் பொழுது அனைத்துமே அனுப்பப்பட்டுள்ளது. இதுவும் அங்கிருந்து வந்துள்ள தவறான தகவலாக உள்ளது.

ஆளுநர் மாளிகையிலிருந்தே உண்மைக்கு புறம்பான தகவல் வந்தால் நாளை ஆளுநர் மாளிகை சொல்லும் எந்த செய்தியை யாவது பொதுமக்கள் நம்புவார்களா என்பதை உங்களது முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

முன்னாள் அமைச்சர்களை காப்பாற்ற ஏதேனும் தந்திரமான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டால் அதற்கு அரசாங்கம் பொறுப்பாக முடியாது. இது முழுக்க முழுக்க ஆளுநர் எடுத்துள்ள மழுப்பல் நடவடிக்கை. நேற்று ஒரு கடிதம் அனுப்பியதற்கு உடனடியாக அதற்கு ரியாக்ஷன் காட்ட வேண்டிய அவசியம் இல்லை ஆனால் மழுப்பலாக உடனே செய்தி ருக்கிறார்கள் என்று சொல்லும் போது அவர்களை காப்பாற்றுவதற்காக இது போல் ஆளுநர் செய்கிறார்.

எம்.ஆர். விஜயபாஸ்கர் மீது நடவடிக்கைக்கு எந்த வித ஒப்புதலும் அரசிடமிருந்து வரவில்லை என்று ஆளுநர் மாளிகையில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

15.05.2023 அன்று அது குறித்த கோப்புகள் ஆளுநர் மாளிகையில் பெறப்பட்டுள்ளது. எந்த ஒப்புதலுமே வரவில்லை என்று பொய்யான தகவல் வந்துள்ளது அப்புறம் எப்படி அவர்கள் கையொப்பமிட்டு அந்த கோப்புகளை வாங்கி இருப்பார்கள்? வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதற்காக வழக்கு தொடர்வதற்கு அனுமதி கேட்டு இருக்கிறோம்.

இந்த தகவலும் உண்மைக்கு புறம்பாகவே ஆளுநர் குறிப்பிட்டுள்ளதாக ஆளுநர் மாளிகையில் இருந்து பத்திரிகை செய்தி வந்துள்ளது. அந்த பத்திரிகை செய்தியில் குறிப்பிட்டுள்ள மூன்று தகவல்களும் தவறானவை. இனிமேலாவது தவறான செய்திகளை தர வேண்டாம். தவறான செய்திகளை ஆளுநர் மாளிகை தருகிறது என்ற தமிழ்நாடு ஆளுநர் மாளிகைக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதை பொறுப்போடு கேட்கின்றோம்.

பல மாநிலங்களில் ஆளுநர் மீது வழக்கு தொடர்ந்து உள்ளார்கள். நாங்கள் பொறுத்து தான் பார்க்க முடியும். சட்ட ரீதியாக இதற்கான அனுமதிகள் கிடைக்கவில்லை என்று சொன்னால் எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அடுத்த கட்ட நடவடிக்கையில் நிச்சயமாக இறங்குவார் அவரது பொறுமைக்கும் எல்லை உள்ளது.

### ஒப்புதல் தராமல் இழுத்தடிக்கிறார்!

ஆளுநர் ஒப்புதலை தராமல் இழுத்தடிக்கும் காரணத்தினால் அரசின் குற்றவியல் தலைமை வழக்கறிஞர் இடத்தில் இதுகுறித்து கருத்துக்கள் கேட்டபோது சில வழக்குகளை முன்னுதாரணமாக காண்பித்து சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் மீது சட்டப்பேரவை தலைவர் இடத்தில் அனுமதி பெற்று வழக்குகளை தொடரலாம் என்ற கருத்துக்களை கூறியுள்ளனர். அதன் அடிப்படையிலேயே தான் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீது யார் யார் மீது வழக்கு தொடர்கிறோமோ இந்த அடிப்படையில் கொண்டு செல்வோம்.


### முதல்வரிடம் ஆலோசனை பெற்று பதில் கடிதம்!

ஆளுநர் மாளிகையில் இருந்து வந்துள்ள பத்திரிகை செய்திக்கு முதலமைச்சரின் ஆலோசனை பெற்று பதில் கடிதம் அனுப்ப வேண்டும் என்றால் அனுப்பவும். அப்படி இல்லை என்றால் அவர்கள் பத்திரிகை செய்தி அனுப்பியதை போல அதேபோல பத்திரிகை செய்தியை நாங்களும் அனுப்புவோம். ஆளுநர் மாளிகையில் இருந்து சட்டத்துறைக்கு முறைப்படி விளக்கக் கடிதம் வரவில்லை பத்திரிக்கை செய்தியாகவே அந்த விளக்கம் வந்துள்ளது.

ஆளுநர் இரட்டை வேடம் போடுகிறார், ஒருபுறம் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் மற்றொருபுறம் திமுகவை எந்த வகையிலாவது பழி வாங்க வேண்டும் என்பதற்காக இதுபோன்ற தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் நிச்சயமாக எந்தவிதமான நடவடிக்கைக்கும் அஞ்சவும் மாட்டார். அவரை பழி வாங்க நாங்கள் விடவும் மாட்டோம்.

ஆளுநரை திரும்ப பெற வேண்டும் என்று பலரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் . நாம் ஒன்றிய அரசிடம் தான் சொல்ல முடியும் ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

தி.மு.க.வுக்கு அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக செயல்பட முடியவில்லை பா.ஜ.க.வும் எதிர்க்கட்சியாக இல்லை, அதனால் ஆளுநர் மாளிகையில் இருந்து சனாதனம் பேசிக்கொண்டு தி.மு.க.வுக்கு எதிராக கருத்துக்களை பரப்புவதை தனது வழக்கமாக ஆளுநர் வைத்துள்ளார் எதிர்க்கட்சியாக ஆளுநர் செயல்படுகிறார் என்று தெரிவித்தார்.



சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தளவாய்ப்பட்டி, உட்பட 7 ஊராட்சிகளில், முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் தார்சாலையாக ரூ.3 கோடியே 46 லட்சம் செலவில் அமைக்கும் பணியை தளவாய்ப்பட்டியில் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், மாவட்டக் கழகச் செயலாளருமான இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சேலம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர். மலர்கொடிராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர். ரெயின்போ நடராஜன், தளவாய்ப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கே.ராஜா, பொதுக் குழு உறுப்பினர் ஏ.ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் கீதா குணசேகரன், ஒன்றிய கவுன்சிலர் அமுதா கோவிந்தன் உட்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2023) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் திருக்கோயில்கள் சார்பில் 34 இணைகளுக்கான திருமணங்களை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

# மிக சிறப்பாகச் செயல்படுகிறது இந்து சமய அறநிலையத்துறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் 8 பெண்கள் உட்பட பட்டியலினத்தவர், பழங்குடியினர் சமூகத்தைச்சேர்ந்த 17 பேரை அர்ச்சகராக்கி இருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றமும் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருத்தியல் என்பது இதுதான். நம்முடைய ஆட்சியின் நோக்கத்தை இன்றைக்கு நீதிமன்றமும் அங்கீகரிக்கக்கூடிய காலமாக ஏன், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை அமைந்திருக்கிறது.

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதில் இந்து சமய அறநிலையைத் துறையும் மற்ற துறைகளோடு போட்டி போட்டுக்கொண்டு மிக, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கு நாடு நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறது.

**'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருத்தியல் என்பது இதுதான். நம்முடைய ஆட்சியின் நோக்கத்தை இன்றைக்கு நீதிமன்றமும் அங்கீகரிக்கக் கூடிய காலமாக ஏன், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை அமைந்திருக்கிறது.**

கோயில்கள் மிகச் சிறப்பாகவும் சீராகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்து சமய அறநிலையத் துறையை நம்முடைய நீதிக்கட்சி உருவாக்கியது என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

'கோவில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது' என்று பராசக்தி திரைப்படத்தில் அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வசனம் எழுதினார். அப்படி கோயில்களில் எந்தத் தவறுகளும் நடந்துவிடக் கூடாது என்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்பட்டார் என்பதை உணர்ந்து இன்றைக்கு திராவிட மாடல் அரசு அதே வழியில் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

### அறநிலையத்துறையின் பொற்காலம்!

தலைவர் கலைஞருடைய ஆட்சிக்காலம் என்பது அனைத்துத் துறைகளிலும் பொற்காலமாக இருந்ததைப் போலவே, இந்து சமய அறநிலையத் துறையிலும் இன்றைக்கு ஒரு பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

நான் பெருமையோடு சில செய்திகளை, சாதனைகளைப் பட்டியலிட விரும்புகிறேன். நம்முடைய கழக ஆட்சி மலர்ந்த பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான திருப்பணிகள், வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழமையான கோயில்களை, பழமை மாறாமல் சீர்செய்து குடமுழுக்கு விழாவை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அதேபோல் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயல்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3,986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

* 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளது.

* திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழி முறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த நிதியாண்டில் மட்டும் 5,078 திருக் கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதனை நான் சில மாதங்களுக்கு முன்பு அறிவிப்பாக வெளியிட்டேன்.

### பழமை வாய்ந்த கோயில்களைச் சீர் செய்வதற்கு ரூ.100 கோடி ஒதுக்கி திருப்பணிகள்!

கடந்த காலத்தில் 1000 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள 1000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

நமது அரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயில்களின் எண்ணிக்கை 1250 ஆகவும், நிதியுதவி ரூ.2 இலட்சமாகவும் உயர்த்தி அறிவிக்கப்பட்டது. இதற்காக 50 கோடி ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

ஏழை இணையர்க்கு 50,000 ரூபாய்மதிப்புள்ளசீர்வரிசைகளோடு திருமணம் நடத்தி வைத்தல், 2 ஆண்டுகளில் 836 கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு, 764 கோயில்களில் அன்னதானம், 8 கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், 15 கோயில்களில் மருத்துவ மையம், 15,000 கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம், திருத்தேர் மராமத்து மற்றும் புதிய திருத்தேர் உருவாக்குதல் என இன்னும் பல பணிகள் முழு வீச்சில் இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் நாம் மேற்கொண்டு வருகிறோம். இவை அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதியோடு அதிக இடங்களில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

### அறநிலையத்துறையில் 'திராவிட மாடல்' அரசின் நோக்கம்!

இதன் மூலமாக கோயில்கள் சீரமைகின்றன. பக்தர்கள் மன நிறைவை அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைத்தான் நம்முடைய அரசும் விரும்புகிறது. இது தான் திராவிட மாடல் அரசினுடைய நோக்கம்!

மறைந்த பெரியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்' என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன.

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!"** என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில் தான் 34 இணையருக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படுகின்றன.

### தமிழ்ப் பெயர் சூட்டி தமிழ் உணர்வூட்டுங்கள்!

இந்தத் துறைக்கு, "இந்து சமயத் துறை" என்று பெயரல்ல, "இந்து சமய அறநிலையத் துறை" என்று பெயர். அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற அறப்பணிகளை தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். அதே நேரத்தில் நம்முடைய மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், தமிழ் உணர்வை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், "வீட்டிற்கு விளக்குகளாய், நாட்டிற்குத் தொண்டர்களாய்" இருந்து நீங்கள் பாடுபடுங்கள், பணியாற்றுங்கள், உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு, வாழ்க மணமக்கள், வாழ்க மணமக்கள் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.